(*d*) The villages provisionally selected are as follows:—

| Chidambaram taluk. | Vriddhachalam taluk. |
|---|---|
| 1 Kattalai. | 9 Dharmanallur. |
| 2 Nellikottai. | 10 Villakkappadi. |
| 3 Erumbur. | 11 Uyyakundravi. |
| 4 Chinna Nerkunam. | 12 Kottagam. |
| 5 Palayamkottai Melpadhi. | 13 Ko. Adanur. |
| 6 Perur. | 14 Te. Pavalangudi. |
| 7 Kanur. | 15 Sathapady. |
| 8 Valayamadevi Melpadi and Kilpadi. | 16 Mummudisholagam. |

**[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]**

## II.—SITTINGS OF THE HOUSE.

MR. SPEAKER :—" I have placed 60 questions on the agenda for to-morrow. Day after to-morrow, which will probably be the last day of the present sitting, I want to place on the agenda the rest of the questions to which answers have been received. The number of such questions will be about 250. If we sit on Monday also, I will have to place before the House 100 questions on Friday and the rest on Monday. I wish to know from the Hon. the Leader of the House whether we will be sitting on Monday."

THE HON. SRI C. SUBRAMANIAM :—" I think we should rise on the 13th. Many hon. Members have expressed their wish to go back to their homes on the 13th."

SRI K. VINAYAKAM :—" There are many hon. Members on this side who want that we should sit even on Monday."

SRI A. RATNAM :—" There are too many Bills to be discussed. To-morrow is a non-official day."

SRI K. VINAYAKAM :—" The time for transaction of non-official business has been cut short."

MR. SPEAKER :—" No. We are sitting for five hours tomorrow."

SRI K. C. GOPALAN UNNI :—" No, Sir. There will be only four hours, from 9 a.m. to 1 p.m."

MR. SPEAKER :—" If so desired, we can have the sitting from 8-30 a.m. to 1-30 p.m."

**SRI M. KALYANASUNDRAM** :—"கனம் சபாநாயகர் அவர்களே, இந்த 12-05
ஜில்லா போர்டு சட்டத்தின் திருத்த மசோதாவிற்கு கொடுத்திருக்கக்கூடிய p.m.
திருத்தங்களைப் பார்த்தால் இன்று முழுவதும் இதைப்பற்றி விவாதித்தாலும் இன்றைக்குள் அது நிறைவேற்றப்படுமா என்பதே சந்தேகத்தில் இருக்கிறது. மேலும், நாளைக்கு உத்தியோகப் பற்றற்ற தீர்மானங்கள் வர இருக்கின்றன. ஜில்லா போர்டு தேர்தல் வோட்டு முறையைப்பற்றிய விவாதம் இருக்கிறது. மற்ற சில சிறு மசோதாக்களும் இருக்கின்றன. அவற்றையெல்லாம்

[Sri M. Kalyanasundram] [11th August 1954

திங்கட்கிழமையன்று எடுத்துக்கொண்டால் உதவியாக இருக்கும். இதர கேள்விகளுக்கும் மந்திரிகள் பதில் கொடுத்தமாதிரியும் இருக்கும். ஆகவே, சர்க்கார் கட்சித் தலைவர் அவர்கள் இந்த யோசனையை ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றேன்."

THE HON. SRI C. SUBRAMANIAM :—" Let us see the progress we make to-day. Then, we shall decide the question."

### III.—ADJOURNMENT MOTION *RE*

#### SALE OF ASSETS OF THE MADRAS ELECTRIC TRAMWAYS.

MR. SPEAKER :—" The hon. Member Sri M. Kalyanasundaram has given notice of the following adjournment motion :—

'I move that the House be adjourned to discuss an urgent matter of public importance, namely, the failure of the Government to prevent the sale of the assets of the Tramways to scrap iron merchants to the detriment of the revival of Tramways and also to the proper realisation of the dues of the Government from the said Company.'

Where is the urgency in the matter? How are the Government responsible for this? "

SRI M. KALYANASUNDRAM :—" கனம் சபாநாயகர் அவர்களே, இந்தப் பிரச்னை மிகவும் அவசரமானது ; சர்க்கார் இதற்கு நேரடியான பொறுப்பு உடையவர்களாக இருக்கிறார்கள். டிராம்வே கம்பெனியின் சொத்துக்களின் விற்பனையைத் தடை செய்வதற்கு இப்பொழுதும் சந்தர்ப்பம் இருக்கிறது. சர்க்கார் முயற்சி எடுத்து ஹைகோர்ட்டுக்கு மனுப் போட்டு புல் பெஞ்சுக்கு அப்பீல் செய்தார்களானால், அந்த விற்பனையைத் தடை செய்து வைக்கமுடியும். இது விஷயத்தில் சர்க்கார் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டியதன் அவசியத்தை அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவரவேண்டும் என்பதற்காகத்தான் இந்த ஒத்திவைப்புப் பிரேரணையைக் கொடுத்து நான் விவாதிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். இது மிக மிக முக்கியமான பிரச்னை என்பதைத் தாங்களும் ஒப்புக்கொள்வீர்கள் என்று நினைக்கிறேன்."

MR. SPEAKER :—" சட்டசபை விதிகளுக்குட்பட்டு, இந்த விஷயம் இப்பொழுது விவாதத்திற்கு எடுத்துக்கொள்வதற்கான அவசரம் இல்லை என்று நினைக்கிறேன்."

SRI M. KALYANASUNDRAM :—" கனம் சபாநாயகர் அவர்களே, இது மிக முக்கியமான பிரச்னை ; அவசரமாக விவாதிக்கப்பட வேண்டிய பிரச்னையும் ஆகும். ஏனென்றால், உடனடியாக சர்க்கார் நடவடிக்கை எடுக்கத் தவறுவார்களானால், டிராம்வேக்கள் விற்கப்பட்டு அவைகள் அகற்றப்பட்டுவிடும். இன்று காலை எனக்கு ஒரு செய்தி வந்திருக்கிறது. பம்பாயிலிருந்து வந்திருக்கக்கூடிய பழைய இரும்பு வியாபாரிகள் இயந்திரங்களை அப்புறப்படுத்துவதற்கு ஆரம்பித்துவிட்டார்களென்றும், பழைய இயந்திரங்களையெல்லாம் உடைப்பதற்கு ஏற்பாடு செய்துகொண்டிருப்பதாகவும் செய்தி வந்திருக்கிறது. அதனால் ஆத்திரமடைந்து, கவலை கொண்ட சென்னை நகரவாசிகளும், டிராம்வே தொழிலாளிகளும் அந்த இயந்திரங்களை அப்புறப்படுத்துவதைத் தடுப்பதற்காகவேண்டி சத்தியாக்கிரகம் செய்யும் நோக்கத்துடன் திரண்டுகொண்டிருக்கிறார்கள் என்பதையும் கேள்விப்படுகிறேன். இவையெல்லாம் உண்மையில் நம்முடைய நகரத்தின் அமைதியைக் குலைக்கக்கூடிய பிரச்னையாகும் என்பதை சர்க்கார் கவனிக்கவேண்டும்.

" இதற்கு சர்க்கார் எப்படிப் பொறுப்பு என்று தாங்கள் கேட்கலாம். நம்முடைய முதல் அமைச்சர் ஸ்ரீ காமராஜ் நாடார் அவர்கள் பதவிக்கு வந்த பிறகு, டிராம் வண்டிகள் மீண்டும் ஓட்டப்படும் என்ற புது நம்